**OS.NO:104/2024**

**PW1 : திரு.ஏழுமலை**

நாள் : 23.07.2025

**சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு, சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.**

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை –**

அப்பாகுட்டி மந்திரியின் பிள்ளைகள் 1. முருகேசன், 2. ராமலிங்கம், 3. ராஜவேல், 4. தர்மன், 5. சாமிநாதன் ஆவார். முருகேசன், ராஜவேல், தர்மன் ஆகியோர்கள் ரங்கசாமியிடம் இருந்து தாவா சொத்தை கூட்டாக கிரையம் பெற்றார்கள். வெங்கடாபுரத்தில் இருந்து சுமார் 1 கி.மீ இருந்து 2 கி.மீ தொலைவிற்குள் தாவா சொத்து உள்ளது. எங்கள் ஊரில் இருந்து ஓடையை தாண்டிதான் தாவா சொத்திற்கு செல்ல வேண்டும் என்றால், சரிதான். ஓடையை தாண்டி செல்வதற்கு மாமூலாக வழி உள்ளது. அந்த மாமூலமான வழி அரசு பொது வழி அல்ல என்றால், அந்த வழியாக காலம், காலமாக செல்கிறார்கள். அந்த வழி மற்றவரின் நிலம் என்றாலும், அந்த நிலத்தின் வரப்பு வழியாகதான் செல்ல வேண்டும் என்றால், அந்த வழியாகதான் எல்லாரும் செல்கிறார்கள். தாவா சொத்திற்கு மேற்கில் வனத்துறைக்கு சொந்தமான இடம் உள்ளது. தாவா சொத்திற்கு வடக்கில் என் சித்தப்பா சாமிநாதன் நிலம் உள்ளது. சாமிநாதன் சொத்தை ரங்கசாமியிடம் இருந்து வாங்கினார் என்றால், சரிதான். சாமிநாதன் வாங்கிய இடம் மேடாக உள்ளது என்றால், தவறு. என் நிலத்திற்கு சமமாகதான் சாமிநாதன் வாங்கிய நிலமும் உள்ளது. தாவா சொத்திற்கு தெற்கில் ரங்கசாமி நிலமும், கிழக்கில் பெரியசாமி, மூர்த்தி ஆகியோர் நிலமும் உள்ளது. தாவா சொத்திற்கு கிழக்கில் உள்ள வரப்பு வழியாகதான் நான் போக வேண்டும் என்றால், சரிதான். தாவா சொத்தில் பம்புசெட்டு, கிணறு உள்ளதா என்றால், இல்லை. தாவா சொத்தில் கிணறு,

பம்பு செட்டு இல்லாததால், தாவா சொத்தில் மானாவரி பயிர்தான் செய்ய முடியும் என்றாலும், வாழை மரம் பயிரிட முடியாது என்றாலும், சரியல்ல. பிரதிவாதியின் மனைவிக்கு 50 வயதாகிறது. பிரதிவாதியின் மனைவிக்கு காலில் அறுவை சிகிச்சை செய்தார்கள் என்றால், எனக்கு தெரியாது. தாவா சொத்தை பயிர் வைப்பதற்காக வேண்டி தனித்தனியாக பிரித்து அனுபவித்து வருவதாக தாவாவில் சொல்லியுள்ளோம் என்றால், சரிதான். தாவா சொத்தில் பொதுவில் 3ல் 1 பாகத்தை நான் தர்மனிடம் வாங்கினேன். நான் வாங்கிய இடம் சாமிநாதன் நிலத்தை ஒட்டி தெற்கில் உள்ளது. தாவா சொத்தை தென் வட வாடையில் கிழக்கு, மேற்காக மூவரும் பிரித்து அனுபவித்து வருகிறோம் என்றால், அது தவறு. வனத்துறை நிலத்திற்கு கிழக்கில் முருகேசனும், சாமிநாதன் நிலத்திற்கு தெற்கில் நானும், ரங்கசாமி நிலத்திற்கு வடக்கில் ராஜவேலும் அனுபவித்து வருகிறோம். ஆனால், பாகம் பிரியவில்லை. நான் சொல்வது தவறு என்றாலும், நாங்கள் கிழக்கு, மேற்காக அனுபவித்து வருகிறோம் என்றாலும், அது சரியல்ல. தாவா சொத்து திமிரி காவல் நிலைய எல்லைக்குள் உள்ளது. எங்கள் ஊரில் இருந்து திமிரி காவல் நிலைய செல்ல பேருந்து உள்ளது என்றால், குறிப்பிட்ட நேரங்களில் பேருந்து உள்ளது. என்னிடம் இருசக்கர வாகனம் உள்ளது. என் அப்பாவிற்கு இருசக்கர வாகனம் ஓட்ட தெரியாது. ஜீன் மாதம் 17ந் தேதி வாழை மரங்களை வெட்டினார்கள். இது சம்மந்தமாக அன்றே புகார் கொடுத்தோம். என் மனைவி புகார் கொடுத்தார். புகார் கொடுத்தது போலீஸ் ஆவணங்களை பார்த்தால் தெரியவரும் என்றால், சரிதான். வா.சா.ஆ.7ல் சர்வே எண்கள் இல்லை என்றால், சரிதான். தாவா சொத்தில் வாழை மரங்கள் பயிர் செய்தோம் என காண்பிக்க அடங்கல் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். கூட்டுறவு வங்கியில் வாழை

மரம் பயிர் வைக்க விவசாய கடன் வாங்கினேன் என காண்பிக்க ஆவணங்கள் கொடுத்துள்ளேன். வாழை மரம் சேதாரம் சம்மந்தமாக சேதாரத்தை நிர்ணயம் செய்ய Expert யாரையும் வைத்து சேதாரத்தை அளவிடவில்லை என்றால், Expert யாரையும் வைத்து அளவிடவில்லை. சேதாரத்தை அறிய இந்த வழக்கில் வழக்கறிஞர் ஆணையர் நியமனம் செய்ய மனு எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். பாகப்பிரிவினை பத்திரம் எழுதாதது சம்மந்தமாக எங்களுக்கும், பிரதிவாதிக்கும் விரோதம் ஏற்பட்டது. ஊரில் பாகப்பிரிவினை செய்யும் போது பெரியவர்களுக்கு தென்பக்கம் பாகம் வைப்பார்கள் என்றால், இடத்தை பொறுத்து பாகம் வைப்பது சம்மந்தமாக முடிவு செய்வார்கள். எனக்கு கிரையம் கொடுத்த தர்மன் என்பவர் பிரதிவாதிக்கு தம்பி என்றால், சரிதான். வனத்துறை நிலம் வழியாக தாவா சொத்திற்கு வர வழி இல்லை என்றால், சரிதான். ஊர் வழக்கம்படி என் தந்தை முருகேசனக்கு தாவா சொத்தில் தென்புறமும், பிரதிவாதிக்கு அதற்கு அடுத்த வடபுறமும், அதற்கு அடுத்த வடபுறத்தில் தர்மனுக்கும் அனுபவிப்பதற்காக வாய்மொழியாக பாகம் பிரிக்கப்பட்டது என்றால், அது தவறு. அவ்வாறு வடபுறத்தில் தர்மனுக்கு ஒதுக்கப்பட்ட பகுதியை தான் நான் வாங்கினேன் என்றால், அது தவறு. தாவா சொத்து இன்னும் பாகப்பிரிவினை செய்யப்படவில்லை. தர்மன் அனுபவித்த வடபுறத்தைதான் நான் வாங்கினேன் என்றால், ஆமாம் என்று சாட்சி கூறுகிறார். சாட்சி பின்னிட்டு இது வரை தாவா சொத்து பாகம் பிரிவினை செய்யப்படவில்லை என்று கூறுகிறார். நான் அனுபவிக்கும் நிலத்திற்கும், என்அப்பா அனுபவிக்கும் நிலத்திற்கும் இடையில் பிரதிவாதி அனுபவிப்பதால், நாங்கள் மாற்றி மாற்றி பிரதிவாதிக்கு தொந்தரவு கொடுக்கிறோம் என்றால்,

அது தவறு. அனுபவ படி பாகம் பிரிக்க பிரதிவாதி எங்களை அழைத்தார் என்றாலும், ஆனால் நானும், என் தந்தையும் பக்கத்து பக்கத்து இடங்களை ஒதுக்க வேண்டும் என்று சொல்லி தொந்தரவு கொடுக்கிறோம் என்றால், சரியல்ல. நான் என் செல்வாக்கை பயன்படுத்தி காவல் நிலையத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய ஏற்பாடு செய்தேன் என்றால், அது தவறு. தாவா சொத்தில் நாங்கள் வாழை மரம் பயிரிடவில்லை என்றாலும், தாவா சொத்தில் மானாவரி பயிர்தான் செய்கிறோம் என்றாலும், அது சரியல்ல. தாவா சொத்தை போலீசார் பார்க்கவில்லை என்றால், சரியல்ல. பிரதிவாதியும், அவர் மனைவியும் வயதானவர்கள் என்றாலும், எங்கள் தொந்தரவு காரணமாக அவர்கள் தாவா நிலத்தாண்ட வருவதே கிடையாது என்றால், சரியல்ல. பிரதிவாதியும் அவரது மனைவியும் சேர்ந்து வாழை மரங்களை வெட்டியதாக நான் சொல்லுவது தவறு என்றால், சரியல்ல. நஷ்ட ஈடு கோருரிமையை பொறுத்து வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால், சரியல்ல. ஏற்கனவே அனுபவபடி பிரிக்க வேண்டும் என்றால், அவ்வாறு பிரித்தால் தொடர்ந்து சண்டை ஏற்படும்.

**மறு விசாரணை –**

இல்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness and admitted by him/her to be correct.

M SELVAM

Principal District Judge, Ranipet
Digitally signed by M SELVAM
DN: cn=M SELVAM, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN

Principal District and Sessions Judge,
Ranipet